RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21217

# தமிழ்ச் சமூகத்தில் அறம் - சில விளக்கங்களும் வரையறைகளும்

ப.வசந்தி [அ, *], வெ. பரிமளம் [அ]

[அ] தமிழ் இலக்கியத்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாட்சி, இந்தியா

# Virtue in Tamil Society – Explanations and Definitions

P. Vasanthi [a, *], V. Parimalam [a]

[a] Department of Tamil, N.G.M College, Pollachi, India.

* Corresponding Author:
Vasanthiias95@gmail.com

Received : 17-01-2021
Revised : 09-04-2021
Accepted : 16-04-2021
Published : 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The moral discipline of the individual and the flourishing of social life are inseparable virtues. Morality guides man to live in harmony with society. In the context of the Tamil community, morality is paramount. The Tamil tradition has established morality as an authority superior to even divine authority, considering the indispensability of morality. Such power and authority of morality can be found intertwined centrally in all Tamil literatures. After the Sangam literature, distinct types of literature emerged specifically to discuss morality. These literatures integrated morality as an integral part of life, examining it in relation to all its aspects.

**Keywords:** Morality, Virtues, Divine, Tamil literatures

## முன்னுரை

தனிமனித ஒழுக்கம் மேம்படவும் சமூக வாழ்வு சிறக்கமும் இன்றியமையாதது அறம் ஆகும். மனிதன் சமூகத்தோடு இயைந்து வாழ அறமே அவனை வழி நடத்துகிறது. தமிழ் சமூகத்தைப் பொருத்தவரை அறமே தலையாது. அறத்தின் இன்றியமையாமை கருதியே கடவுளின் அதிகாரத்திற்கும் மேம்பட்ட அதிகாரத்தை அறத்திற்கு வழங்கி அதனை யாவற்றிற்கும் மேலானதாக கட்டமைத்தது தமிழ் மரபு. அறத்தின் இத்தகைய ஆற்றலும் அதிகாரமும் தமிழ் இலக்கியங்கள் யாவற்றிலும் மையச்சரடாக இழையோடியிருப்பதை அறியலாம.; சங்க இலக்கியங்களுக்கு பிறகு அறத்தை பேசுவதற்கென்றே தனி வகை இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவ்விலக்கியங்கள் அறத்தை வாழ்வின் அங்கமாக்கி அதன் எல்லா கூறுகளோடும் பொருத்திப் பார்த்தன.

## அறம் என்பதன் பொருள்

அறம் என்றால் ஒருவர் சமூகத்தில் எப்படி நடக்க வேண்டும் என்பது தொடர்பான விதிமுறைகள் ஆகும். இது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைகளின் தொகுப்பாகும். அறம், ஒழுக்க நெறி, தர்மம், நீதி, விழுமியம், கொடை, நோன்பு ஆகியவற்றை குறிக்கும். மேலும், 'அறம்' என்ற சொல் விரிந்த பொருளையுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். தமிழர் வாழ்க்கையில் -அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் அறம்- கடைப்பிடிக்கப்பட்டு வருதலைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகவும் தெளிவாகவும் புலப்படுத்தியிருப்பதைக் கண்டு மகிழலாம். 'அறம்' என்ற சொல் நீதியைக் குறிக்கும் அதற்கு மேலும் நாளைய பொருள்களைத் தரும்.

பல பொருளில் 'அறம்' என்ற சொல் இடத்திற்கேற்பகளில் வழங்கப்படுகின்றது. கருத்துப் பொருள் இப்படிப் பலவகையில் இருந்தாலும் அவையெல்லாவற்றுக்கும். அடிப்படையாக உள்ள அதன் சொற்பொருள் 'அற்றது' என்பதாகும். அது பற்றற்ற நிலை, தன்னலப்பற்று அற்ற தூய்மை நுட்பமும் ஆற்றலும் கொண்ட அந்நிலையை 'உண்மை' என வழங்கலாம். 'நன்மை' என்றும், 'நேர்மை' என்றும், 'குணம்' என்றும், 'நல்லூழ்' என்றும் 'கடமை' என்றும் பிறவாறும் கருதலாம். ஆகவே தொல்லாசிரியர்கள் 'அறம்' என்பதை பல்வேறு கருத்துகளிலும் ஆள்வர். என்ற பேராசிரியர் நா.சுப்புரெட்டியாரின் கருத்தும் கருதத்தக்கது.

## அறம் பற்றிய சில குறிப்புகள்

அறத்தைப் பற்றிப் பேசும் தமிழ் நூல்கள் மிகப் பலவாக உள்ளன. எனினும், 'அறம் என்றால் என்ன?" என்ற வினாவினை எழுப்பினால், அதற்கு விடை காண்பது மிகவும் கடினமான செயலாகிறது. 'அறம்' என்னும் சொல் பொருளில் மிகவும் நெகிழ்ச்சியுடையது. அதைப் பகுத்துப் பொருள் காணுதல் எளிதன்று. அச்சொல்லின் பொருளை வரையறுத்து விளக்குகின்றபொழுது பல சிக்கல்கள் தோன்றுகின்றன. 'அறம்' என்னும் சொல் காலப்போக்கில் பல்வேறு பொருள்களை உணர்த்தும் பொருள் செறிவு வாய்ந்த சொல்லாகச் சிறப்புற்று விளங்குகிறது.

'அறு' என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே "அறம்' என்னும் சொல்லாகும். 'அறு' என்னும் அடிச் சொல்லிற்கு அறுத்துச் செல், 'வழியை உண்டாக்கு, 'உரு வாக்கு', 'துண்டி', 'வேறுபடுத்து' என்ற பல வகைப் பொருள்கள் வழங்கிவருகின்றன. 'அம்' எனும் தொழிற் பெயர் விகுதி அறுத்தலாகிய தொழிலை உணர்த்துகிறது. இத்தகைய சொல்லமைப்பியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்குப் பின் வரும் விளக்கம் தரப்படுகின்றது.

“மனிதன் தனக்கென வரை யறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே- முழுநிறைவடிவமே - அறம் என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்தெறிவதே 'அறம்' என்று ஆன்மீக வண்ணம் குழைத்த மற்றொரு விளக்கமும் இதற்குத் தரப் படுவதுண்டு”. (திருநாவுக்கரசு.க.த.,1977)

அறம் காலம் நம்பிக்கைகள் பண்பாடு சமயம் மெய்யியல் தனி மனிதனின் மனசாட்சியை போன்றவற்றைப் பொறுத்து வேறுபடுகிறது. அறம் பற்றிய கருத்துக்களை அறிவியலில் எதிக்ஸ் எனலாம். திருக்குறள், நாலடியார் ஆகியவை அறமுறைக்கும் சிறந்த நூல்கள் ஆகும், கொடுமையாளர்களை கடுமையான சொற்களில் சொல்வதை அறம் பாடுதல் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கலம்பக நூல்களில் நந்திக்கலம்பகம் இவ்வாறு அறம் பாடுவதை அடிப்படையாகக் கொண்டு அமைந்த நூல் என்பது கறிப்பிடத்தக்கதாகும்.

## அறம் மற்றும் நீதி

அறமென்பது விருப்பு வெறுப்பின்றி நடுநிலையோடு மனதால் அனைவராலும் சரி என்று ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். நீதி என்பது நிர்வாக முறைக்கு உட்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும் மேலைநாட்டு அறிஞர்கள் நீதி என்பதற்கு பொருளுரைக்கையில் அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் இயற்கை நியதி அல்லது இயற்கை சட்டம் என்று உரைத்துள்ளனர். மேல் நாட்டினர் அறத்தைப் பற்றி குறிக்கையில், இயற்கைநெறியான அறம் இறையாற்றலால் தோன்றுவது என்றும், எல்லா நாட்டினராலும் பொதுவாக போற்றி காக்கப்படுவது என்றும், என்றும் மாறாததும் எக்காலத்தும் நிலைத்திருப்பதுமாகும் என்றும் பொருள் விளக்கம் தந்துள்ளனர்.

அறம், நீதி என்ற சொற்களின் தன்மை பற்றி, ”அறம் நீதி என்ற சொற்கள் ஒரு பொருள் பயப்பன போல் தோன்றுகின்றன நுனிகி ஆராய்ந்தால் அறம் என்பது தர்மசாஸ்திரங்களில் கூறப்படும் உண்மை பொருள் என்பதும் நீதி என்பது நீதி சாஸ்திரங்களில் நூவலபெரும் உண்மை

என்பதும் தெரியவரும். தர்மசாஸ்திரங்களால் கூறப்படும் உண்மைகள் என்றும் மாறாதவை. நீதி சாத்திரங்களில் கூறப்படும் உண்மைகள் காலத்திற்கு காலம் மாறக்கூடியவை என்று குறிப்பிடுவார் நா. சுப்புரெட்டியார். (சுப்புரெட்டியார்.ந.,1988)

## அறவியல் சில கோட்பாட்டு அடிப்படைகள்

தமிழ்சமூகத்தைப் பொறுத்தவரை அறநிலை மிகப்பழமையானதும் தொன்மையானதுமாகும். மனித மன மாசுகளை அகற்றி வீடுபேற்றை நல்கவல்லது அறமாகும். அத்தகை அறத்தை இல்லறம், துறவறம் என இரண்டாக பகுத்துரைத்தனர். பொதுவாகத் தமிழரின் அறக் கொள்கை தத்துவத்தையும் சமய நெறியுமே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அற நூல்களில் இதனை உணரலாம்.

அறம் பற்றிய பதிவுகள் தமிழ் இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படினும் ஆராய்ச்சி நிலையில் அறப்பொருள் குறித்து அதிகம் விவாதிக்கப்படவில்லை. மேலை நாடுகளில் இக்கோட்பாடு குறித்து ஆழமாக விவாதிக்கப்பட்டு இருக்கின்றது. அறத்தை அறிவியல் முறையில் ஆராயும்துறை அறவியல் என்று அழைக்கப்படுகின்றது.

## அறத்தின் வளர்ச்சி நிலைகள்

மேலை நாட்டில் அறிவியல் ஆராய்ச்சியின்படி மனித சமூகத்தில் அறம் வளர்ச்சியுற்ற நிலைகளை மூன்றாகப் பாகுபடுத்திக் கூறுவர்.

1.இயல்பூக்க நிலை, 2.மரபொழுங்கு நிலை, 3.மனச்சான்று நிலை என்பன அவை.

### இயல்பூக்க நிலை

ஆதிமனிதரிடம் இயல்பூக்கமாகவே நல்ல நடத்தை, கெட்ட நடத்தை என்பதை பகுத்துப் பார்க்கும் பண்பு இருக்கிறது. தேவைகளாலும் சூழலாலும் இவை தீர்மானிக்கப்படுகின்றன என்று எடுத்துரைப்பது இயல்பூக்க நிலையாகும். மனித குணங்களான அன்பு, இரக்கம் தயை, கருணை, இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று போன்றவற்றை இந்த இயல்பூக்க நிலையின் வெளிப்பாட்டிற்கு சான்றாக கூறலாம்.

### மரபு ஒழுங்கு நிலை

மனிதன் தான் வாழும் சமூகத்தில் மரபாக பின்பற்றப்படும் நடத்தை விதிகளுக்கு ஒத்த நடத்தையே நன்னடத்தையாக ஏற்று பின்பற்றுதல் மரபொழுங்கு நிலை எனப்படுகின்றது. பெரும்பாலான சமூகங்கள் மரபு ஒழுங்கு நிலையிலான நடத்தையைத்தான் ஒப்புக்கொள்கின்றன என்பது ஆராய்ச்சியாளர்களுடைய முடிவாக இருக்கின்றது.

### மனச்சான்று நிலை

மனிதன் தன் மனச்சான்றின்படி எது நல்லது, எது கெட்டது என பகுத்தாய்ந்து முடிவுகளை ஒப்புக்கொள்வதே மனச்சான்றுநிலை என்பர். வள்ளுவரும்,

“மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்

ஆகுல நீர பிற” (சுப்பிரமணியன்.ச.வே.,2010)

என்று எடுத்துரைத்துள்ளதை அறியலாம்.

## அறம் பற்றிய புராணக் கதை

ஒரு சமயம் பார்வதி தேவி சிவபெருமானின் கண்களை விளையாட்டாக தன் கரங்களால் மூடியதால் உலகம் இருண்டது. அப்போது சிவன் தன் நெற்றிக்கண்ணைத் திறந்து உலகத்தை வழக்கம் போல் செயல்பட வைத்தார். விளையாட்டாகச் செய்தாலும் அது வினையானதால் பார்வதி தேவி பூவுலகில் பிறந்து, யாகம், தவம் செய்து, இரு நாழி நெல் கொண்டு முப்பத்திரண்டு அறங்களைச் செய்து பின் தன்னை அடையுமாறு சிவன் கூறினார்.

அவ்வாறே பார்வதி தேவியும் பூவுலகில் பிறந்து திருவண்ணாமலை, மாங்காடு, காஞ்சிபுரம் போன்ற இடங்களில் தங்கி தவம் செய்து, யாகங்கள் செய்து முப்பத்திரண்டு அறங்களை மேற்கொண்டு பின் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. இதனால் ‘அறம் வளர்த்த நாயகி’ என்று பார்வதி தேவி போற்றப்பட்டார்.

## அறப்பளீசுர சதகத்தில் அறங்கள் பற்றிய விளக்கம்

முப்பத்திரண்டு அறங்கள் பற்றி அறப்பளீசுர சதகம் கீழ்காணுமாறு குறிப்பிட்டுள்ளது

"பெறுமில், பெறுவித்தலொடு, காதோலை, நாள்தொறும்

பிள்ளைகள் அருந்திடும் பால், பேசரிய சத்திரம், மடம், ஆவுரிஞ்சுகல்

பெண்போகம், நாவிதன், வணான், மறைமொழிகணாடி, தண்ணீர், தலைக் கெண்ணெய்பசு

வாயின்உறை, பிணம்அடக்கல், வாவி, இறும் உயிர்மீட்டல், தின்பொருள், அடைக்காய்

வழங்கல், சுண்ணாம்பு தவுதல், சிறையுறு பவர்க்கமுது, வேற்றிலம் காத்தல், பொழில்

செய்தல், முன்னூலின் மனம், திகழ்விலங் கூண், பிச்சை, அறுசமயருக்குண்டி,

தேவராலாயம், அவுடதம்; அறைதல்கற் போர்க்கன்னம் நாலெட்டறங்களும்முன்

அன்னைசெயல்; அருமை மதவேள் அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்

அறப்பளீ சுரதே வனே! (அம்பலவாணக் கவிராயர்., 1913)

என்று முப்பத்திரண்டு அறங்களை அறபளீசுவர சதகம் பட்டியலிடுகிறது.

## திவாகர நிகண்டு கூறும் அறங்கள்

முப்பத்திரண்டு அறங்கள் எவை எவை என திவாகர நிகண்டு கூறும் பட்டியல். “ஆதுலர் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறு சமயத்தோர்க்கு உணவு, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம், மகச்சோறு, மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத் தூரியம்; வண்ணார், நாவிதர், வதுவை, பூணூல், நோய் மருந்து, கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், சுண்ணம், பிறர்துயர் காத்தல், தண்ணீ ர்ப் பந்தர், மடம், தடாகம், கா, ஆவுரிஞ்சி நடுதறி, ஏறு விடுத்தல், விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல், இச்செயல் முப்பத்திரண்டு அறம் என்ப." என திவாகர நிகண்டு உரைக்கின்றது. (சண்முகம்பிள்ளை.மு.,சுந்தரமூர்த்தி.இ.1990),

## தமிழ்சிந்தனை மரபில் அறம்

தமிழ்ச் சிந்தனைக்கும் இந்தியப் பொதுச்சிந்தனைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. இந்தியச் சிந்தனை மரபின்படி அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் அடையவேண்டியவை. தமிழ்ச் சிந்தனை மரபில் தொல்காப்பியர் காலந்தொட்டே அறம் பொருள் இன்பம் என்ற கருத்து மட்டுமே உண்டு. வீடு பற்றிய கருத்து கிடையாது.

தமிழ் இலக்கியம் முழுவதுமே அற இலக்கியம்தான். சங்க இலக்கியம், காப்பியங்கள், அறநூல்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள் என்றெல்லாம் பல பிரிவுகள் இருந்தாலும், அவை யாவற்றின் அடிச்சரடும் அறம் என்பதே. சான்றாக, ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழின் சிறப்பை எடுத்துக்காட்டாகக் கபிலர் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்:

சமஸ்கிருத மரபில் எண்வகை மணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் யாழோர் மணமாகிய காந்தர்வத்தை ஒத்தது தமிழர்களின் களவு. ஆனால் இரண்டிற்கும் அடிப்படையில் ஒரு வேறுபாடு உள்ளது. சமஸ்கிருத மணமாகிய காந்தர்வத்தில், கற்பு வாழ்க்கை என்பது இல்லை. ஆசையிருக்கும் வரை சிலநாள் கூடியிருந்து பிரிந்துவிடும் வாழ்க்கை அது. அங்கே திருமணம், கற்பு வாழ்க்கை என்பது இல்லை. ஆனால் தமிழின் களவு மணமோ முறைப்படி, கற்பாகிய திருமண வாழ்க்கையிலே நிறைவெய்த வேண்டும் என்கிறார். இதனை உணர்த்துவதற்காகவே குறிஞ்சிப்பாட்டு என்ற அற்புதமான இலக்கியம் அவரால் படைக்கப்பட்டது..

காப்பியங்களும் இவ்வாறே அமைந்திருக்கின்றன. அரசியலில் தவறு செய்தவர்களுக்கு அறமே கூற்றாகும் (எமனாக அமையும்), கற்பிற் சிறந்த பெண்களைப் பலரும் போற்றி வணங்குவர், ஊழ்வினை தவறாமல் தனது பலனை அளிக்கும் என்ற மூன்று அறக்கருத்துகளை உணர்த்தவே இயற்றப்பட்டது சிலப்பதிகாரம் என்று அதன் பாயிரம் கூறுகிறது. அறம் வெல்லும்-பாவம் தோற்கும் என்ற அடிப்படைக் கருத்தினை உடையது கம்பர் எழுதிய இராமாயணம். இவ்வாறு நுணுகி நோக்கும்போது தமிழ் இலக்கியங்கள் யாவுமே அற இலக்கியங்கள் என்பதை நாம் உணரலாம்.

## முடிவுரை

அறம் பற்றிய வரையறைகளையும் விளக்கங்களையும் நோக்கும் பொழுது தமிழ்ச்சூழலில் காலத்துக்கு காலம் அறம் பற்றிய சிந்தனைகள் மாற்றம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது. சமயத்தத்துவங்களின் செல்வாக்கும் ஒவ்வொரு காலத்திலும் நிலவிய மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு மாற்றங்களும் அறம் பற்றிய பார்வைகளை மாற்றியமைத்துள்ளன. தமிழ்ச்சிந்தனை மரபில் வீடுபேறு பற்றிய கருத்தாக்கம் பெரும்பாலும் இடம்பெறவில்லை என்பதயும். பிற்காலத்தில் தோன்றிய மேலை நாட்டு அறக்கோட்பாடுகளுக்கு நிகராக தமிழர்களின் அறச்சிந்தனை இடம்பெற்றிருப்பதையும் உணரமுடிகிறது.

## References

Subramanian, S.V., (2010) Eighteen Lesser Texts, Manivasagar Publishing House, Chennai.

Subpuredtiyar, N. (1988) Virtue in Tamil Literature, Ainthinai Publishing House, Chennai.

Thirunavukkarasu, K.T. (1977) Thirukkural Justice Literature, University of Madras, Chennai.

Shanmugampillai, M., Sundaramurthy, E. (1990), Divakaram, University of Madras, Chennai.

Ambalavanak Kavirayar, (1913) Arappalisura Sadakam, Madras Ribbon Printing House, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License